[2011 பிப்ரவரி 10

(ஈ) வால்பாறை, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை யானைகள் மிதித்துக் கொன்றது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியில் நேற்று மதியம் மாலை 3-30 மணியளவில் வால்பாறையில் இருக்கின்ற டான்டீ தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 24 பெண்கள் வேலை செய்து கொண்டிருந்த நேரத்தில் திருமதி செல்லத்தாய் வயது 55, க/பெ. சாமிகுட்டி, திருமதி கதிர்ஜா, வயது 56, க/பெ. சைபுதீன், திருமதி பரமேஸ்வரி, வயது 55, க/பெ. சதாசிவம் ஆகியோரை மூன்று யானைகள் துரத்தியதால் அந்தப் பெண்கள் ஓடமுடியாமல் போனதால் அந்த மூன்று பேரையும் யானைகள் மிதித்துக் கொன்றுவிட்டன. அந்தக் குடும்பம் வறுமையில் இருக்கின்ற குடும்பம். அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். சமீபத்தில் வால்பாறையில் அந்தத் தொழிலாளர்களுக்கு 15 ஆண்டுகளுக்குப் பிறகு சம்பளத்தை உயர்த்தியும், வால்பாறைக்கு வந்தும், எல்லோரும் வயிறாரச் சாப்பிடுகின்ற இந்த நேரத்தில் இவ்வாறு தொடர்ந்து சிறுத்தைகளாலும், யானைகளாலும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டு வருகின்றதைக் கண்டு வால்பாறை மக்கள் கொதித்துப் போய் இருக்கின்றார்கள். வேதனையடைந்திருக்கின்றார்கள். வால்பாறைக்கு பலமுறை நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் வந்திருக்கின்றார்கள். யானைகள் மிதித்த இடத்தை ஏற்கெனவே அவர்கள் நேரில் வந்து பார்த்திருக்கின்றார்கள். அது மிகவும் அடர்ந்த காடு. அங்கு குடியிருக்கின்ற மக்களின், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வீடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. சாலைகள் மிகவும் பழுதடைந்து, இரண்டரை-மூன்று அடி குழிகள் உள்ள சாலைகளை அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்திருக்கிறார்கள். நாங்களும் தொடர்ந்து பலமுறை அமைச்சர் அவர்களிடம் பழுதடைந்துள்ள ரோடுகளையும் வீடுகளையும் சரி செய்து கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். தெருவிளக்குகளும் இல்லை. சுற்றிலும் அடர்ந்த காடுகள். அதனாலே இதுவரைக்கும் 27 பேர் இறந்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே ஆளுநர் உரையில் பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னேன். உடனடியாக வால்பாறையில் அகழிகளை வெட்ட வேண்டும். மின்வேலி போட

2011 பிப்ரவரி 10] [திரு. கோவை தங்கம்]

வேண்டும். ஏனென்றால், தமிழ்நாட்டிலேயே என்னுடைய வால்பாறை தொகுதியில்தான் இம்மாதிரி உயிர்ச்சேதங்கள் அதிகமாக ஏற்பட்டுள்ளன. 27 பேர் இதுவரைக்கும் இறந்திருக்கிறார்கள். இதில் யானை மிதித்து இறந்தவர்கள் 16 பேர். சிறுத்தைப் புலி 11 குழந்தைகளை பாதிப்படையச் செய்துவிட்டது. இன்னும் சிறுத்தை புலி நடமாட்டம் இருக்கிறது. யானைகளின் நடமாட்டமும் தொடர்ந்து இருக்கிறது. வால்பாறையில் நேற்று இரவு 12 மணி வரைக்கும் அந்தப் பிரேதத்தை திரும்பி வாங்காமல் 500 பேர் மிகப்பெரிய போராட்டம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இப்போது தொடர்ந்து போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. பிரேதத்தை வாங்கமாட்டோம் என்று பாதிக்கப்பட்ட மக்கள் சொல்லிவிட்டார்கள். அந்த அளவிலே வால்பாறையில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு ரூ.5 இலட்சம் நஷ்ட ஈடு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

முற்பகல் 9-40

அந்தப் பகுதியிலிருக்கிற மக்கள் நீண்டகாலமாக குண்டும், குழியிலும்தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். வீடுகள் மிகவும் பழுதடைந்திருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாகப் பார்த்தார்கள். அந்த வீடுகளுக்கு கதவு, ஜன்னல்கள் இல்லை. எந்த நேரம் வந்தாலும் அதைத் தட்டினால் மொத்த வீடுகளும் விழுந்துவிடும். அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கூரை வீடு, ஓட்டு வீடுகள்தான், ஆனால், மட்ட வீடு மாதிரி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 21 இலட்சம் வீடுகளை 'கலைஞர் வீட்டு வசதி திட்டத்தின்' மூலம் கட்டிக்கொடுக்கிறார்கள். அதிலே 20,000 வீடுகளை வால்பாறைப் பகுதிக்கு நீங்கள் ஒதுக்கித் தர வேண்டும். ஏனென்றால், அவை மிகவும் பழுதடைந்த குடியிருப்புகளாக இருக்கின்றன. அந்தப் பகுதி, தமிழ்நாட்டிலிருக்கிற மலைப் பகுதிகளில், அதிகமாக பாதிக்கப்படக்கூடிய பகுதியாக இருக்கிறது. அதனால் 20,000 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டை உடனே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வால்பாறைக்கு வந்து அந்தப் பகுதியைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லி, உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.